©
தமிழ்நாடு அரசு
2018

[பதிவு எண்.TN/CCN/467/2012–14
[நி.மு.எண்.197/2009
[விலை : ரூ.3.20 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாகவெளியிடப்பட்டது

எண். 26] சென்னை, செவ்வாய் கிழமை, ஜனவரி 23, 2018

தை 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு– 2049

**பகுதிIII– பிரிவு 1 (அ)**

## தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்டபொதுச் சட்ட விதிமுறைகள், அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறை நெறிகள், இன்னபிற.,

## அரசின் அறிவிக்கைகள்

**வணிக வரிகள் மற்றும் பதிவுத்துறை**

**தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி(திருத்தம்) விதிகள்,2018**

***[அ.ஆ. நிலை எண்.6, வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை (ஆ1), 23 ஜனவரி 2018, தை 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]***

**எண்.எஸ்ஆர்ஓஅ-1(அ)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017–இன்பிரிவு 164–இல் (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19ல்) அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017–ஐ மேலும் திருத்த, தமிழ்நாடு ஆளுநரால், இதன் மூலம் பின்தொடரும் விதிகள் ஏற்படுத்தப்படுகிறது, அதாவது:-

(1) இந்த விதிகள் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தம்) விதிகள் 2018 என்று அழைக்கப்படலாம்.

(2) இருப்பினும் மற்றபடி உள்ளவாறு, அவைஅலுவல் சார்ந்த அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

(2)தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017–ல்,–

(i) விதி –3ல்,துணை விதி (3அ)ல்,"தொண்ணூறு நாட்கள்" என்ற வார்த்தைகளுக்காக"நூற்றிஎண்பது நாட்கள்"என்ற வார்த்கைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

(ii) அட்டவணையின், விதி 7–ல், 2018, ஜனவரி1 முதல் செயலுக்கு வரும்,

(அ) வரிசை எண்.1 ன்,நிரல் எண்.(3)– இல் ''ஒரு சதவீதம்'' என்ற வார்த்தைகளுக்காக''மாநில அல்லது ஒருங்கிணைந்தஆட்சிப்பகுதியின் மொத்தத் தொகையில்அரை சதவீதம்''என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

(ஆ) வரிசை எண்.2ன்,நிரல் எண்.(3) – இல் ''இரண்டரை சதவீதம்'' என்ற வார்தைக்குகளுக்காக ''மாநில அல்லது ஒருங்கிணைந்தஆட்சிப்பகுதியின் மொத்தத் தொகையில் இரண்டரை சதவீதம்''என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

(இ) வரிசை எண்.3ன். –இல் நிரல் எண்.(3) – இல் ''அரை சதவீதம்'' என்ற வார்த்தைகளுக்காக''மாநில அல்லது ஒருங்கிணைந்தஆட்சிப்பகுதியின் வரிவிதிக்கத்தக்க சரக்குகள் வழங்கலின்மொத்தத் தொகையில் அரை சதவீதம்''என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

(iii) விதி 20–இல், அந்த காப்புரைவிட்டுவிடப்பட வேண்டும்;

(iv) விதி 24 – இல்உப விதி (4)–இல் ''31டிசம்பர்2017''இலக்கங்கள், எழுத்துக்கள் மற்றும் வார்த்தை''31மார்ச் 2018''என்றவார்த்தைகளுக்காகஇலக்கங்கள்,எழுத்துக்கள் மற்றும் வார்த்தை மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

(V) விதி 31–க்கு பின்னர், பின்தொடரும் விதி இடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

**"31A. லாட்டரி, பந்தயம், சூதாட்டம் மற்றும் குதிரைப்பந்தயம் நேர்வில் வழங்கலின் மதிப்பு.– (1)** இந்த அத்தியாத்தில் அடங்கியிருக்கும் விதிமுறைகள் வேறு எங்கு சொல்லப்பட்டிருந்தாலும்,கீழே குறிப்பிடப்பட்ட வழங்கல்கள் தொடர்பான விலைமதிப்பு,இதற்கு பின் வழங்கப்பட்ட விதத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

2) (அ) மாநில அரசாங்கங்களால்நடத்தப்படும் லாட்டரியின் வழங்கலின் விலைமதிப்பு சீட்டின் (டிக்கெட்டின்) முக மதிப்பில் 100/112 ஆக கருதப்படும் அல்லது ஏற்பாடு செய்யும் மாநில அலுவல் சார்ந்த அரசிதழில் அறிவிக்கப்பட்டுள்ள விலை,இதில் எது அதிகமோ அது.

(ஆ) மாநிலஅரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பட்ட லாட்டரியில் வழங்கல் மதிப்பு சீட்டின் (டிக்கெட்டின்) முக மதிப்பில் 100/28 கருதப்படும்மதிப்பு அல்லது நடத்தப்படும் மாநில அலுவல் சார்ந்த அரசிதழில் அறிவிக்கப்பட்டுள்ள விலை, அதில் எது அதிகமானதோ அது.

<u>**விளக்கம்:**</u>இந்த உப விதியின் நோக்கங்களுக்காக, வார்த்தைகள்–

(அ) "மாநில அரசாங்கங்களால் நடத்தப்படும் லாட்டரி"-ன் பொருளானது, ஏற்பாடு செய்யும் மாநிலம் தவிர மற்ற எந்தவொரு மாநிலத்திலும் விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை;

(ஆ) "மாநில அரசாங்கங்களால் அதிகாரமளிக்கப்படும்லாட்டரி"-ன்பொருளானது,ஏற்பாடு செய்யும் மாநிலம் தவிர பிற மாநிலம்(ங்களில்) கூடஅந்த லாட்டரியானதுவிற்பனை செய்வதற்குஅதிகாரமளிக்கப்பட்டவை ஆகும்; மற்றும்

(இ) லாட்டரிகள் (ஒழுங்குமுறை நெறி) விதிகள் 2010, ன் விதி–2ன் உப விதி (1) கூறு(1) இல்"ஏற்பாடு செய்யும் மாநிலம்" அதே பொருள்பட வகுத்தமைக்கப்பட்டுள்ளது.

(3)பந்தயம், சூதாட்டம் அல்லது குதிரைப் பந்தய மன்றத்தில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு வடிவத்தில் நடவடிக்கைக்குரிய கோரிக்கை வழங்கலின் விலைமதிப்பானது குதிரைகள் மீது கட்டும் பந்தய விவரங்களைப் பதிவு செய்யும் கருவியில் செலுத்தப்பட்டத் தொகை அல்லது பந்தயத்தின் முகமதிப்பில் 100% ஆக இருக்க வேண்டும்."

(iv) இந்த விதி43ல் உபவிதி (2)க்கு பின்னர், விளக்கங்களுக்காக, பின் தொடரும் விளக்கம் மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

**விளக்கம்:**"இந்த விதி மற்றும்விதி 42 –ன் நோக்கங்களுக்காக, இதன் மூலம் தெளிவுப் படுத்தப்படுத்துவது என்னவெனில், விலக்களிக்கப்பட்ட வழங்கல்களின்மொத்தவிலைமதிப்பில்விடப்படவேண்டியவை–

அ)2017 அக்டோபர் 27ந் தேதியிட்ட, இந்திய அரசிதழ் அசாதாரணத்தின் பகுதி 3, பிரிவு II,உட்பிரிவு (1)ல்,ஜிஎஸ்ஆர் 1338(E)எண் மூலம்வெளியிடப்பட்ட, 2017 அக்டோபர் 27ந் தேதியிட்ட இந்திய அரசின் நிதிஅமைச்சகம், வருவாய்த் துறை எண் 42/2017 – ஒருங்கிணைந்த வரி(வீதம்) அறிவிக்கையில்குறிப்பிடப்பட்ட சேவை வழங்களுக்கான விலைமதிப்பு;

ஆ) வைப்புத்தொகைகளை ஏற்றுக்கொள்வதன் மூலமான சேவைகளுக்கான விலை மதிப்பு, கடன்கள் அல்லது முன்பணங்களை நீட்டிப்பதனால் இதுவரைமறுபயனானது வட்டி அல்லது தள்ளுபடி மூலம் குறித்துக்காட்டப்படுவதால், ஒரு வங்கிநிறுவனம்நேர்வு தவிர அல்லது வங்கி சாரா நிதி நிறுவனம்உட்பட்டநிதி நிறுவனம்,கடன்கள் மற்றும் முன்பணங்களை நீட்டித்தல், வைப்புத் தொகைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், பணியில் ஈடுபடுவதன் வாயிலாக சேவைகளை வழங்குதல் ; மற்றும்

இ) இந்தியாவிற்கு வெளியே உள்ள இடத்திற்கு,இந்தியாவில் உள்ள சுங்க தடைநீக்க நிலையத்திலிருந்து கப்பல் மூலம் சரக்குகளை கொண்டு செல்வதன் வாயிலாக வழங்கப்படும் சேவைகளின் விலைமதிப்பு;

(vii) விதி 54–இல், உப விதி(1)–க்கு பின்னர், பின் தொடரும் உப விதி இடைசேர்க்கப்படவேண்டும், அதாவது :–

"(1அ) (அ) ஒரு பதிவு பெற்றநபர், ஒருஉள்ளீட்டு சேவை பகிர்ந்தளிப்பவராக, அதேநிகஎ (PAN) மற்றும் மாநில குறியீடு வைத்திருப்பவர், ஒரு விலைபட்டியலை வழங்கலாம் அல்லது, நேர்வுக்கு ஏற்ப, உள்ளீட்டு சேவை பகிர்ந்தளிப்பவருக்கு மாற்றம் செய்வதற்கு, பொது உள்ளீட்டு சேவைகளின் வரவிற்கான ஒரு வரவு அல்லது பற்றுக் குறிப்பானது , பின் தொடரும் விவரங்களை உள்ளடக்கி இருக்க வேண்டும் :–

(i) ஒருஉள்ளீட்டு சேவை பகிர்ந்தளிப்பவராகஅதேநிகஎ (PAN)மற்றும் அதே மாநில குறியீடு வைத்திருக்கும் ஒருபதிவு பெற்ற நபரின்பெயர், முகவரி மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அடையாள எண் ;

(ii) பதினாறு இலக்கங்களுக்கு மிகாமல் தொடர்ச்சியான வரிசை எண், ஒன்றுஅல்லது பல தொடர்களில்,அகர வரிசை அல்லது எண்கள் அல்லது சிறப்பு எழுத்துக்கள்இணைப்புக் கோடு அல்லது கோடு மற்றும் சாய்வுக் கோடு "-"மற்றும் "/" முறையே குறியிடப்பட்டது , மற்றும் அதன் சேர்மானம் ஏதாவது, ஒரு தனித்துவமான நிதியாண்டிற்கு;

(iii) அதன்வெளியிடப்பட்டதேதி ;

(iv) உள்ளீட்டு சேவைபகிர்ந்தளிப்பவருக்கு வரவு மாற்றப்பட முற்படும்பொது சேவைவழங்குபவரின் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அடையாள எண் மற்றும்மூல விலைபட்டியல் எண் ;

(v) உள்ளீட்டு சேவை பகிர்ந்தளிப்பவரின்பெயர், முகவரி மற்றும் சரக்குள் மற்றும் சேவைகள் வரி அடையாள எண்;

(vi) வரிவிதிக்கத்தக்க விலைமதிப்பு,வீதம் மற்றும் மாற்றம் செய்யப்பட வேண்டிய வரவுத்தொகை; மற்றும்

(vii)பதிவு பெற்ற நபரின் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டசார்பாளரின் கையொப்பம் அல்லதுஎண்சார் கையொப்பம்.

ஆ) கூறு (அ) வின் கீழ்வழுங்கப்பட்ட விலைப்பட்டியலில் உள்ள வரிவிதிக்கத்தக்க விலை மதிப்பானது பொது சேவைகளின் விலை மதிப்பைப் போலவே இருக்க வேண்டும்;

(viii) விதி 55க்கு பின்னர், பின் தொடரும் விதிஇடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

**"55அ.சரக்குகள் கொண்டு செல்லும் போது உடன் செல்ல வேண்டிய வரிவிலைப்பட்டியல் அல்லது வழங்கலின் சீட்டு:-**

இந்த விதியின் கீழ் மின்னனு வழிப்பட்டியலை எடுத்துச் செல்ல தேவைப்படாத இந்த நிகழ்வில் அத்தகைய நபர் விதி 46அஅல்லது 49ன் விதிமுறைகளுக்கு இணங்கி வழங்கப்பட்ட வழங்கலின் சீட்டு அல்லது வரிவிலைப்பட்டியலின் நகலினை வாகனத்தின் பொறுப்பான நபரால் எடுத்துச் செல்லப்படும்."

(ix) 2017, அக்டோபர் 23 முதல், விதி 89–ன், உபவிதி (4அ) மற்றும் உப விதி (4ஆ) க்காக,பின் தொடரும் உப விதி மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

(4அ)2017,அக்டோபர்18ந்தேதியிட்ட,தமிழ்நாடு அரசு அரசிதழ், அசாதாரணமனதின், பகுதி2–பிரிவு–IIன் பக்கம்–2 –இல் வெளியிடப்பட்ட, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண்:II(2)/வவப /868 (ஊ–2)/2017 –இன்பலன் துய்க்கும் இந்த நேர்வில், பெறப்பட்ட வழங்கல்கள் மீது வழங்குநரால்உள்ளீட்டு வரி வரவு திருப்புத்தொகை, துய்த்தது தொடர்பான இதர உள்ளீடுகள் அல்லது உள்ளீடு சேவைகளை பயன்படுத்தி பூஜ்ய விகித சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கல் அல்லது இரண்டிற்கும், வழங்க வேண்டும்

(4ஆ)2017,அக்டோபர் 23ந் தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ், அசாதாரணமனதின், பிரிவு–2,பகுதி –II ன்,பக்கங்கள் 1–2ல் வெளியிடப்பட்ட வணிகவரி மற்றும் பதிவுத் துறை அறிவிக்கை எண்.II(2)/வவப/868(ஈ)/2017 அல்லது 2017,அக்டோபர் 23ந் தேதியிட்ட GSR 1321 (ஈ) எண் மூலம் , இந்திய அரசிதழ், அசாதாரணமானதின், பகுதி– IIன், பிரிவு–3ன், உட்பிரிவு (i) ல், வெளியிடப்பட்டஅறிவிக்கை எண்.41/2017–ஒருங்கிணைந்த வரி (வீதம்)நாள் 2017 அக்டோபர் 23அல்லது2017, அக்டோபர் 13ந் தேதியிட்ட GSR 1272(E) எண் மூலம், இந்திய அரசிதழ்,அசாதாரணமானதின், பகுதி –II ன், பிரிவு –3ன். உட்பிரிவு (i)ல்வெளியிடப்பட்ட அறிவிக்கை எண்.78/2017–சுங்கம்நாள் 13 அக்டோபர் 2017 அல்லது 2017 அக்டோபர் 13ந் தேதியிட்ட GSR 1299(E) எண் மூலம் இந்திய அரசிதழ் அசாதாரணமானதின்,பகுதி –IIன், பிரிவு–3ன், உட்பிரிவு–(i) 3ல் தேதியிட்ட வெளியிடப்பட்ட அறிவிக்கைஎண்.79/2017–சுங்கம் நாள் 13 அக்டோபர் 2017 அல்லதுஅவை அனைத்தின் பலனை துய்த்த பெறுபவரால் பெறப்பட்ட அந்த வழங்கல்களின் நேர்வில், சரக்குகள் ஏற்றுமதிக்காக கூறப்பட்ட அறிவிக்கைகளின் கீழ் பெறப்பட்ட உள்ளீடுகளில் துய்க்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவிற்கான திருப்புத் தொகை,மற்றும் அத்தகைய சரக்குகள் ஏற்றுமதி செய்வதற்கு பயன்பட்ட அளவிற்கு உள்ளீட்டு சேவைகள்அல்லது இதர உள்ளீடுகள் தொடர்பான துய்க்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு, வழங்கபட வேண்டும்.

(x) விதி 96 –இல், 2017 அக்டோபர் 23 முதல்செயலுக்கு வரும்,

அ) உப விதி (1) –இல்"ஒரு ஏற்றுமதியாளர்" என்ற வார்த்தைக்களுக்காக "சரக்குகளின்ஒரு ஏற்றுமதியாளர்" என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

ஆ) உபவிதி (2) –இல்"தொடர்புடையஏற்றுமதி விலைப்பட்டியல்கள்" என்ற வார்த்தைக்களுக்காக"சரக்குகள் ஏற்றுமதி தொடர்பான உரிய ஏற்றுமதி விலைபட்டியல்கள்'' என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

(இ)உபவிதி(3)–இல்"சுங்கத்துறையால்ஏற்படுத்தப்பட்ட அமைப்பானது திருப்புத்தொகைக்கான கோரிக்கையை செயல்படுத்தும்" என்ற வார்தைகளுக்காக, 'சுங்கத்துறையால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு

அல்லது சுங்கத்துறையின் உரிய அலுவலரால், நேர்வுக்கு ஏற்ப, சரக்குகளின் ஏற்றுமதி தொடர்பானதிருப்புத் தொகை கோரிக்கையினை செயல்படுத்தும்” என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

(ஈ)உபவிதி (9)– க்காக, பின் தொடரும் உபவிதிகள்மாற்றீடு செய்யப்பட வேண்டும்,அதாவது:-

“(9)இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்ட சேவைகள் மீது செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரி, திருப்புத் தொகைக்கான விண்ணப்பமானது **படிவம் சமசேவ RFD 01** –ல் தாக்கல் செய்யப்பட வேண்டும் மற்றும் விதி 89ன் விதிமுறைகளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டும் “.

(10) 2017, அக்டோபர் 18ந் தேதியிட்ட, தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணமானதின், பிரிவு –2ன், பகுதி–IIன், பக்கம் 2ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண்.II/(2)/வவப/868(ஊ–2)/2017 அல்லது 2017,அக்டோபர் 23ந் தேதியிட்ட, தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணமானதின்,பிரிவு-2ன்,பகுதி-IIன், பக்கங்கள் 1–2ல் வெளியிடப்பட்ட வணிகவரி மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண்.II(2)/ வவப/868(ஈ)/2017 அல்லது 2017, அக்டோபர் 23ந் தேதியிட்ட,GSR எண்.1321 (E) மூலம் , தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணமானதின்,பகுதி-IIன்,பிரிவு-3ன், உட்பிரிவு(i)ல்,வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் 41/2017–ஒருங்கிணைந்த வரி (வீதம்)நாள் 23 அக்டோபர் 2017அல்லது 2017, அக்டோபர் 13ந் தேதியிட்ட GSR 1272 (E) எண் மூலமாக இந்திய அரசிதழ் அசாதாரணமானதின், பகுதி II, பிரிவு–3,உட்பிரிவு (i) ல்வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் 78/2017–சுங்கத்துறை நாள் 13 அக்டோபர் 2017 அல்லது 2017, அக்டோபர் 13ந் தேதியிட்ட , GSR 1299 (E) மூலம் இந்திய அரசிதழ் அசாதாரணமானதின், பகுதி– II, பிரிவு– 3, உட்பிரிவு (i)ல், வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் 79/2017 சுங்கத்துறை நாள் 13 அக்டோபர் 2017–களின் பலன் துய்த்தவரிடமிருந்து, பெறப்படாத சரக்குகள் அல்லது சேவைகளின் வழங்கல்கள் மீது, ஏற்றுமதியின் மீது செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரியினை திருப்புத்தொகை கோரும் நபர்கள். ”

(xi) 2018 பிப்ரவரி 1, முதல் விதி 138க்காக பின்தொடரும் விதி, மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

**“138. சரக்குகளின் இடம் பெயர்த்தல் துவங்குவதற்கு முன்னர் அளிக்கப்பட வேண்டிய தகவல் மற்றும் மின்னனு வழிப்பட்டியல் உருவாக்குதல்:-**(i) ரூபாய் ஐம்பதாயிரத்துக்கு மிகையான மதிப்புடைய அனுப்பு சரக்குகளின் இடம் பெயர்த்தலை ஏற்படுத்தும் அனைத்து பதிவு செய்த நபரும்–

(i) ஒரு வழங்கலின் தொடர்பாக; அல்லது,

(ii) ஒருவழங்கல் அல்லாத வேறு காரணங்களுக்காக; அல்லது,

(iii) ஒருபதிவு பெறாதநபரிடமிருந்து உள்வழங்கல் காரணமாக,

அத்தகைய சரக்குகளின் இடம்பெயர்த்தலுக்கு முன்பாக,**படிவம் சமசேவEWB-01ன், பகுதி அ–இல்**குறிப்பிடப்பட்டபடி அந்த சரக்குகள் தொடர்பான தகவல்களை பொது வலைவாயிலில் தேவைப்படும் இதர தகவல்களுடன், பொது வலைவாயிலில்மின்னனு முறையில், அளிக்க வேண்டும் மேலும் அந்த வலைவாயிலில் தனித்துவ எண்உருவாக்கப்படும்:

இருப்பினும்ஒரு மாநிலத்திலுள்ள முதன்மையானவரால் வேறு எந்த மாநிலத்திலும் அமைந்துள்ள சில்லறை வேலை செய்பவருக்கு சரக்குகள் அனுப்பப்படும் போது, அனுப்பு சரக்குகளின் விலைமதிப்பினை பொருட்படுத்தாமல் மின்னனு வழிப்பட்டியல்முதன்மையானவரால் உருவாக்கபடவேண்டும்:

இருப்பினும்,மேலும்பிரிவு 24ன் கூறுகள் (i) மற்றும் (ii) ன் கீழ்,பதிவு பெறும் தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்ட அந்த நபர், கைவினைப் பொருட்களைஒரு மாநிலத்திலிருந்து மற்றொன்றிற்கு கொண்டு செல்லும் போது அனுப்பு சரக்குகளின் விலை மதிப்பு எதுவாக இருந்தாலும் கூறப்பட்ட நபர்மின்னனு வழிப்பட்டியலைஉருவாக்க வேண்டும்.

**<u>விளக்கம்: 1</u>**

இந்த விதிகளின் நோக்கங்களுக்காக,“கைவினைப் பொருட்கள்“என்ற சொற்றொடருக்கான பொருளானது 2017, செப்டம்பர் 15ந் தேதியிட்ட,தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தில் பிரிவு–2 ன் பகுதி–IIல், பக்கங்கள் 1 முதல் 2–ல் வெளியிடப்பட்டவணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண்.II(2)/வவப/ 783 (இ–2) /2017ல் ஒதுக்கி கொடுத்து,அவ்வப்போது திருத்தப்பட்டது.

**<u>விளக்கம்: 2</u>**

இந்த விதிகளின் நோக்கங்களுக்காக, அனுப்புச் சரக்குகளின் விலைமதிப்பானது,பிரிவு15–ன் விதிமுறைகளுக்கிணங்க தீர்மானிக்கப்பட்டு, ஒரு விலைப்பட்டியலில் உறுதி செய்யப்பட்டு, வழங்கலின் சீட்டு அல்லது ஒப்படைப்பு சீட்டு. நேர்வுக்கு ஏற்ப, கூறப்பட்ட அனுப்பு சரக்குகள் பொறுத்தவரை வழங்கப்படலாம்மேலும்மத்திய வரி, மாநில அல்லது ஒருங்கிணைந்த ஆட்சிப்பகுதி வரி, ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல்வரி விதிக்கப்பட்டது,ஏதேனும் இருந்தால், இந்த ஆவணத்தில் அடங்கும்.

(2) சரக்கு பெறுபவராக வழங்கலை பெறுபவர் அல்லது சரக்கு அனுப்புபவராக,பதிவு பெற்ற நபரால் சரக்குகள் கொண்டு செல்லும் போது,அவருடைய சொந்த வாகனத்தில் அல்லது வாடகைக்கு எடுத்த ஒன்றில் அல்லது இருப்பூர்திமூலமாக அல்லது விமானம் மூலமாக அல்லது கப்பல் மூலமாக கூறப்பட்ட நபர் அல்லது பெறுபவர் மின்னனு வழிப்பட்டியலை**படிவம் சமசேவEWB-01** இல் மின்னனு முறையில், பொது வலைவாயிலில்**படிவம் சமசேவ EWB–01பகுதி–2ல்**தகவல் அளிக்கப்பட்ட பின்பு உருவாக்கிக் கொள்ளலாம்.

இருப்பினும் சரக்குகள் இருப்புப்பாதை மூலமாக அல்லது விமானம்மூலம் அல்லது கப்பல் மூலமாக கொண்டு செல்லும் போது, ஒரு மின்னனு வழிப்பட்டியல்பதிவு பெற்ற ஒரு நபரால், உருவாக்கப்பட வேண்டும், ஒரு வழங்குநராக அல்லது ஒரு பெறுபவராக , பொது வலைவாயிலில், அவரால் அளிக்கப்படும், அந்த–

(அ) **படிவம் சமசேவ EWB–01ல் பகுதி ஆ–**வில் தகவல்;மற்றும்,

(ஆ)இருப்பூர்தி சீட்டு அல்லது விமான அனுப்புச்சரக்குகுறிப்பு மற்றும் கப்பல் சரக்கேற்றபட்டியலின் வரிசை எண் மற்றும் தேதி, நேர்வுக்கு ஏற்ப.

(3)உப விதி (2) –இன் கீழ் மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கப்படவில்லை எனில் மற்றும் சாலை மூலமாக சரக்குகள் கொண்டுச் செல்வதற்காக, ஏற்றிச்செல்பவரிடம் ஒப்படைக்கப்பட்டதோ, அந்த பதிவு பெற்ற நபரால் ஏற்றிச்செல்பவர் தொடர்பான தகவல்களை பொது வலை வாயிலில் அளிக்கப்படும் மற்றும் **படிவம் சமசேவ EWB–01 பகுதி அ–ல்**ஒரு பதிவு பெற்ற நபரால் அளிக்கப்பட்ட தகவல் அடிப்படையில் கூறப்பட்ட வலைவாயிலில் ஒரு ஏற்றிச்செல்பவரால் மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கப்பட வேண்டும்

இருப்பினும் ஒரு பதிவு பெற்ற நபர் அல்லது ஏற்றிச் செல்பவர், நேர்வுக்கு ஏற்ப, அவரது விருப்பத்தின் படி, அனுப்பு சரக்குகளின்விலைமதிப்பு ஐம்பதாயிரம் ரூபாய்க்கு குறைவாக இருந்தாலும்மின்னனு வழிப்பட்டியலை உருவாக்கி எடுத்துச் செல்லலாம்;

இருப்பினும் மேலும் இடம்பெயர்த்தலானதுஒரு பதிவு பெறாத நபரால்அவருடைய சொந்த வாகனத்திலோ அல்லது வாடகைக்கு எடுத்த ஒன்றிலோ அல்லது ஏற்றிச் செல்பவர் மூலமாகவோ ஏற்படுத்தப்படும் போது, அவரால் அல்லது ஏற்றிச் செல்பவரால், அவர்களது விருப்பத்தின் படி, இந்த விதிகளில் குறிப்பிடப்பட்ட முறையில் மின்னனு வழிப்பட்டியலை**படிவம் சமசேவ EWB–01ல்** பொது வலைவாயிலில் உருவாக்கலாம்.

இருப்பினும் மேலும் மாநிலத்திற்குள் அல்லது ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதிக்குள் சரக்கினை அனுப்புபவர் வியாபார இடத்திலிருந்து ஏற்றிச் செல்பவரின் வியாபார இடத்திற்கு மேலும் கொண்டுசெல்வதற்காக பத்து கிலோமீட்டருக்கு குறைவான தூரத்திற்கு சரக்குகள் கொண்டுச்

செல்லப்படும் போது, ஒரு வழங்குநரால்அல்லது ஒரு பெறுபவரால், நேர்வுக்கு ஏற்ப, வாகனத்தின் விவரங்களை **படிவம் சமசேவ EWB–01 பகுதி ஆ–வில்** ஏற்றிச் செல்பவர் அளிக்க வேண்டியதில்லை.

விளக்கம் 1 – இந்த துணை–விதியின் நோக்கங்ளுக்காக, ஒரு பதிவு பெற்ற பெறுபவருக்கு ஒரு பதிவு பெறாத வழங்குநரால் சரக்குகள் வழங்கும் போது, சரக்குகளின் இடம் பெயர்த்தல் தொடங்கும் நேரத்தில், பெறுபவர் அறியப்படும் நேர்வில்,இடம்பெயர்த்தலானது அத்தகைய பெறுபவரால் ஏற்படுத்தப்பட்டதாக கூறப்பட வேண்டும்.

விளக்கம் 2– உபவிதி (5) ன் காப்புரைக்கு மற்றும் (3)–ல் 3வது காப்புரையின் கீழ் உள் அடங்கிய இடம் பெயர்த்தல் நேர்வினைத் தவிர, சரக்குகள் தரைவழிஇடம் பெயர்த்தலுக்கான தகவல், **படிவம் சமசேவ EWB–01 பகுதி ஆ–**ல் வழங்கப்படவில்லை எனில் மின்னனு வழி பட்டியல் செல்லாததாகிவிடும்.

(4)பொது வலைவாயிலில் மின்னனு வழி பட்டியல் உருவாக்கப்பட்டதன் மீது, தனித்துவமான மின்னனு வழிப்பட்டியல் எண் (EBN) ஒரு வழங்குநருக்கு, ஒரு பெறுபவருக்கு மற்றும் ஒரு சரக்கு ஏற்றிச் செல்பவருககு பொது வலைவாயிலில் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

(5) சரக்குகள் ஒரு வாகனத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றப்படும்போது, ஒரு சரக்குகளை அனுப்புபவர் அல்லது ஒரு பெறுபவர், **படிவம் சமசேவ EWB–01 பகுதி –ஆ–வில்** யாரால் தகவல் கொடுக்கப்பட்டதோ அல்லதுஅத்தகைய மாற்றத்திற்கு மற்றும் சரக்குகளை மேலும்இடம்பெயர்த்தலுக்கு முன்,ஏற்றிச் செல்பவரால், **படிவம் சமசேவ EWB–01ல்** பொது வலைவாயிலில் மின்னனு வழி பட்டியலில் வாகனத்தின் விவரங்கள் புதுப்பிக்கபட வேண்டும்.

இருப்பினும் மாநிலத்திற்குள் அல்லது ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதிக்குள் ஏற்றிச்செல்பவரின் வியாபார இடத்திலிருந்து இறுதியாக சரக்கு பெறுபவரின் வியாபார இடத்திற்கு பத்து கிலோமீட்டருக்கு குறைவான தூரத்திற்கு சரக்குகள் கொண்டுச் செல்லப்படும் போது, வாகனத்தின் விவரங்களை மின்னனு வழிப்பட்டியலில் புதுப்பிக்க முடியாது.

(5அ) சரக்குகளை அனுப்புபவரால் அல்லது பெறுபவரால், **படிவம் சமசேவ EWB–01ன் பகுதி –அ** வில் யாரால் தகவல் அளிக்கப் பட்டதோ, அல்லது ஏற்றிச் செல்பவர், மற்றொரு பதிவு பெற்றவருக்கு அல்லது பட்டியலில் சேர்க்கப்பட்ட ஏற்றிச்செல்பவருக்கு மின்னனு வழிப்பட்டியல் எண்ணை ஒதுக்கலாம்,மேலும் அனுப்பு சரக்குகள் இடம்பெயர்த்தலுக்காக**படிவம் சமசேவ EWB–01ல் பகுதி ஆ–வில்**தகவல்களை புதுப்பிக்க வேண்டும்.

இருப்பினும் **படிவம் சமசேவEWB–01 ல் பகுதி ஆ–வில்**, ஏற்றிச்செல்பவரால் வாகனத்தின் விவரங்கள் புதுப்பிக்கப்பட்டவுடன், சரக்குகள் அனுப்புபவர் அல்லது பெறுபவர் , நேர்வுக்கு ஏற்ப, **படிவம் சமசேவ EWB–01 பகுதி அ–வில்** தகவலை வழங்கியவரால், மற்றொரு ஏற்றிச்செல்பவருக்கு மின்னனு வழி பட்டியல் எண்ணினை உரிமைமாற்ற அனுமதி இல்லை.

(6) உபவிதி (1)ன் விதிமுறைகளுக்கிணங்க, மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கப்பட்ட பின்பு, எங்கு பன்மடங்கான அனுப்பு சரக்குகள் ஒரு வாகனத்தில் கொண்டுச் செல்ல திட்டமிடப்பட்டதோ, ஏற்றிச் செல்பவர் அத்தகைய ஒவ்வொரு அனுப்பு சரக்குகள் தொடர்பாக உருவாக்கப்பட்ட மின்னனு வழி பட்டியல் எண்ணினை பொது வலைவாயிலில் மின்னனு முறையில்குறிப்பிட வேண்டும் மற்றும்சரக்குகள் இடம் பெயர்த்தல் தொடங்குவதற்கு முன்பேகூறப்பட்ட வலைவாயிலில் **படிவம் சமசேவ EWB 02**–ல் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியல் மின்னனு முறையில் அத்தகைய ஒவ்வொரு அனுப்பு சரக்குகளுக்கும்அவரால் உருவாக்கப்படலாம்.

(7) உப விதி(1)ன் விதிமுறைகளுக்கிணங்க, ஒரு சரக்குகள் அனுப்புபவரால் அல்லது ஒரு பெறுபவரால்**படிவம் சமசேவ EWB–01** உருவாக்கப்படாத போது மற்றும்வாகனத்தில் கொண்டு செல்லப்படும் சரக்குகளின் விலைமதிப்பு ரூபாய் ஐம்பதாயிரத்து மேல் எனில், ஒப்படைப்பு சீட்டு, வழங்கலின் பட்டியல் அல்லது விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு சரக்குகளை ஏற்றிச் செல்பவர் **படிவம் சமசேவ EWB –01**ஐ உருவாக்க வேண்டும், நேர்வுக்கு ஏற்ப, சரக்குகளின் இடம் பெயர்த்தல்

தொடங்குவதற்கு முன்பு பொது வலைவாயிலில், மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியல் **படிவம் சமசேவ EWB–02**ஐ உருவாக்கலாம்.

இருப்பினும் மின்னனு வர்த்தக செயல்பாட்டாளர் மூலமாக அந்த சரக்குகள்வழங்களுக்காக கொண்டு செல்லப்படும் போது, அத்தகைய மின்னனு வர்த்தக செயல்பாட்டாளர், **படிவம் சமசேவ EWB–01**ன் பகுதி அ–வில் தகவல் அளிக்கலாம்.

**(8) படிவம் சமசேவ EWB–01**ன் பகுதிஅ–வில் அளிக்கப்பட்ட தகவலானது பொது வலைவாயிலில் பதிவு பெற்ற வழங்குநருக்கு கிடைக்க கூடியதாய் இருக்க வேண்டும் **படிவம் சமசேவந –1** ல் விவரங்களைஅதனை பயன்படுத்தி அளிக்கலாம்.

இருப்பினும் ஒரு பதிவுபெறாத வழங்குநரால் அல்லது பதிவு பெறாத பெறுநரால்**படிவம் சமசேவ EWB–01**ல்தகவல் அளிக்கப்படும் போது, மின்னஞ்சல் முகவரி அல்லது கைபேசி எண் இருந்தால், அவருக்கு மின்னனு முறையில் தெரிவிக்கப்படும்.

(9) இந்த விதியின் கீழ் மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கப்பட்டது,ஆனால் சரக்குகள் கொண்டு செல்லப்படாத போது அல்லது மின்னனு வழிப்பட்டியலில் அளிக்கப்பட்ட விவரங்களின் படி கொண்டு செல்லப்படவில்லையோ, பொது வலைவாயிலில், மின்னனு வழிப்பட்டியல்உருவாக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அந்த மின்னனு வழிப்பட்டியல்நீக்கப்படலாம்

இருப்பினும்விதி 138ஆ–வின் விதிமுறைகளுக்கிணங்க, கொண்டு செல்லப்படும் போது சரிபார்க்கப்பட்டால், அந்த மின்னனு வழிப்பட்டியலை நீக்கம் செய்ய முடியாது.

இருப்பினும், மேலும் உபவிதி(1)ன் கீழ் உருவாக்கப்பட்ட தனித்துவ எண்ணானது **படிவம் சமசேவ EWB–01**ன் பகுதி ஆ–ஐபுதுப்பிப்பதற்கு எழுபத்திரண்டு மணி நேரத்திற்கு செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.

(10) கூறப்பட்ட அட்டவணையின் நிரல் (2)ல்குறிப்பிடப்பட்டவாறுசரக்குகள் கொண்டு செல்லும் போது, நாட்டிற்குள்,தொலைவிற்கு, தொடர்புடைய தேதியிலிருந்துகீழே உள்ள அட்டவணையின் நிரல்–3ல் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு,இந்த விதியின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு மின்னனு வழிப்பட்டியல் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட மின்னனு வழிப்பட்டியல் செல்லுபடியகும் : –

அட்டவணை

| வ.எண் | தூரம் | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | 100 கி.மீ. வரை | ஒரு நாள் |
| 2 | ஒவ்வொரு 100 கி.மீ. அல்லதுஅதன்பிறகுஅவ்விடத்திலிருந்து பகுதி | ஒரு கூடுதல் நாள் |

இருப்பினும், ஆணையரால், அறிவிக்கையின் மூலம் சில வகைப்படுத்தப்பட்ட சரக்குகளுக்காக அதில் குறிபிட்டுள்ளவாறுமின்னனு வழிப்பட்டியல் செல்லுபடியாகும் காலத்தினை நீட்டிக்கலாம்.

இருப்பினும், மேலும் தவிர்க்க முடியாத இயற்கை சூழ்நிலைகளின் கீழ், மின்னனு வழிப்பட்டியல் செல்லுபடியாகும் காலத்திற்குள் சரக்குகள் எடுத்துச் செல்ல முடியாத போது, ஏற்றிச் செல்பவர் **படிவம் சமசேவ EWB–01**ன்பகுதி ஆ– வில் விவரங்கள் புதுப்பித்த பிறகு மற்றொரு மின்னனு வழிப்பட்டியலை உருவாக்கலாம்.

<u>**விளக்கம்:-**</u>

இந்த விதியின் நோக்கங்களுக்காக,"தொடர்புடையநாள்"- ன் பொருளானது, எந்த தேதயில்மின்னனு வழிப்பட்டியல் உருவாக்கப்பட்டதோமற்றும் மின்னனு வழிப்பட்டியல் எப்போது உருவாக்கப்பட்டதோ அதிலிருந்து செல்லுபடியாகும் காலம் கணக்கிடப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு நாளும் இருபத்தி நான்கு மணி நேரங்களாக கணக்கிடப்பட வேண்டும்

**(11)** உபவிதி(**1**) –இன் கீழ் உருவாக்கப்பட்டமின்னனு வழிப்பட்டியலின்விவரங்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்–

அ) வழங்குநர் , பதிவு பெற்றிருந்தால்,**படிவம்சமசேவ EWB–01 பகுதி–அ–வில்**பெறுபவரால் அல்லது ஏற்றிச் செல்பவரால் தகவல் அளிக்கப்பட்டிருந்தால், அல்லது

ஆ) பெறுபவர், பதிவு பெற்றிருந்தால்,**படிவம்சமசேவ EWB–01 பகுதி–அ –வில்**வழங்குபவரால் அல்லது ஏற்றிச் செல்பவரால் தகவல் அளிக்கப்பட்டிருந்தால்,

மின்னனுவழிப்பட்டியலில் உள்ளடங்கிய அனுப்புச் சரக்குகளைஅவரால் ஏற்றுக்கொள்ளுதலை அல்லது நிராகரித்தலை,நேர்வுக்கு ஏற்ப, வழங்குபவரால் அல்லது பெறுபவரால், பொதுவலைவாயிலில், தெரிவிக்கப்படும்.

**(12)** உபவிதி **(11)**ல்குறிப்பிடப்பட்ட தகவல் கிடைக்கப் பெற்ற அந்த நபர், பொது வலைவாயிலில் அவருக்கு விவரங்கள் கிடைக்கப் பெற்ற எழுபத்து இரண்டு மணி நேரத்திற்குள், அவரது ஏற்றுக் கொள்ளுதலை அல்லது நிராகரித்தலை தெரிவிக்காவிட்டால், கூறப்பட்ட விவரங்களை அவர் ஏற்றுக் கொண்டதாக கருதப்பட வேண்டும்.

**(13)** எந்த ஒரு மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளின் விதி **138**ன்அல்லது இந்த விதியின் கீழ்உருவாக்கப்பட்டமின்னனு வழிப்பட்டியல்எல்லா மாநிலத்திலும் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சிப் பகுதியிலும் செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்

**(14)** இந்த விதியில் வேறு எங்கு சொல்லப்பட்டிருந்தாலும், மின்னனு வழிப்பட்டியல் உருவாக்க தேவைப்படாதவை–

அ) இணைப்பில் குறிப்பிட்டுள்ள சரக்குகள் கொண்டு செல்லப்படும் போது ;

ஆ)விசைப்பொறி இல்லா வாகனத்தில் சரக்குகள் கொண்டு செல்லப்படும் போது,

இ)சுங்கத் தடைநீக்கத்திற்காக,துறைமுகம், விமான நிலையம், வான் சரக்கு நிலையத்திலிருந்து மேலும் உள்நாட்டு சரக்கு பெட்டக முனையம் அல்லது சரக்கு பெட்டக முனையத்திற்கோ ஒரு சரக்கினை கொண்டு செல்லும் போது;

ஈ) அத்தகைய சரக்குகளின் இடம் பெயர்த்தலை பொறுத்தவரை மற்றும் மாநிலத்திற்குள் உள்ளஅத்தகைய பகுதிக்குள், முதன்மை தலைமை ஆணையர்/ மத்திய வரி தலைமை ஆணையரின் ஆலோசனையின் பேரில்,மாநில வரி ஆணையர், அறிவிக்கலாம்.

உ) 2017 , ஜுன்29ம் தேதியிட்ட, தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தின், பகுதி –II பிரிவு – 2ன் பக்கங்கள் 68–75ல், அவ்வப்போது திருத்தி வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறையின் அறிவிக்கை எண்.II(2)/வவப/532/(ஈ-5)/2017–க்கு இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட எண்ணை நீக்கப்பட்ட பிண்ணாக்கு தவிர்த்து, இதர சரக்குகளை கொண்டு செல்லும்போது;

ஊ)எடுத்துச் செல்கிற பொருட்கள் மனித நுகர்விற்கான மதுபானம், கச்சா பெட்ரோலியம், அதிவேக டீசல், மோட்டார் சீராவி( பொதுவாக பெட்ரோல் என்று அழைக்கப்படும்) இயற்கை வாயு அல்லது விமான டர்பைன் எரிபொருள் கொண்டுச் செல்லும் போது;மற்றும்

எ) இந்த சட்டத்தின் அட்டவணைIII-ன்கீழ் கொண்டு செல்லப்படும் சரக்குகள் வழங்கலாக கருதப்படாத போது.

விளக்கம்:-மின்னனு வழிப்பட்டியல்உருவாக்கம் மற்றும் நீக்கம் ஆகியவை குறுந்தவகல் (SMS)மூலமாகவும் கிடைக்கப் பெறுமாறு செய்யலாம்.

**இணைப்பு**

**[(விதி 138(14)பார்க்க)]**

| வ.எண் | சரக்குகளின் விவரிப்பு |
|---|---|
| (1) | (2) |
| 1. | வீடுகளுக்கு வழங்கப்படும் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு மற்றும் வீடுகளுக்கு அல்லாத விலக்குபெற்ற (NDEC) வாடிக்கையாளர்களுக்கு |
| 2. | பிடிஎஸ்(PDS)–இன் கீழ் விற்கப்படும் மண்ணெண்ணை |
| 3. | தபால்துறை மூலம் எடுத்துச் செல்லப்படும் தபால் மூட்டைகள் |
| 4. | இயற்கையான அல்லது பண்பட்ட முத்து மற்றும் மதிப்புமிக்க அல்லது பகுதி மதிப்புமிக்க கற்கள், மதிப்புமிக்க உலோகங்கள் மற்றும் மதிப்புமிக்க உலோகங்களால் ஆன உலோக உடுப்பு(அத்தியாயம் 71) |
| 5 | தங்க அணிகலன்கள், பொற்கொல்லரின் மற்றும் வெள்ளிக்கொல்லரின் அணிகலன்கள் மற்றும் பிற பொருட்கள் (அத்தியாயம் 71) |
| 6 | நடப்பு நாணயம் |
| 7 | பயன்படுத்தப்பட்ட சொந்த மற்றும் வீட்டுஉபயோகப்பொருட்கள். |
| 8 | பவளம், வேலைப்பாடற்ற (0508) மற்றும் வேலைபாடுள்ள பவளம் (9601) |

(xii) 2018,பிப்ரவரி 1 முதல், விதி 138 ஆ–ல், உப விதி (3)–ன் காப்புரையில்“யாராலோ நடத்தப்பட்டது” என்ற வார்த்தைகளுக்காக“இன்னொருவரால் நடத்தப்பட்டது” என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்பட வேண்டும்

(xiii) படிவம் சமசேவ ஆர்எப்டி –01 அ–ல்

a) அட்டவணை1அ–க்கு பிறகு, பின்தொடரும்அறிக்கைகள் இடை சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

**“அறிக்கை –2 [விதி 89(2) (இ)]**

திருப்புத்தொகை வகை: வரி செலுத்தப்பட்ட சேவைகளின் ஏற்றுமதி

| வ எண் | விலைப்பட்டியல் விவரங்கள் | | | ஒருங்கிணைந் த வரி | | மேல் வரி | பிஆர்சி(BRC)/ எப்ஐஆர்சி (FIRC) | | ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல்வரி பற்றுச் சீட்டில் உள்ளடக்கப் பட்டது ஏதேனும் இருப்பின் | ஒருங்கிணைந் த வரி மற்றும் மேல் வரி வரவுச் சீட்டில் உள்ளடக்கப்பட் டதுஏதேனும் இருப்பின் | நிகர ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல் வரி(6+7+10–11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | தேதி | விலைமதிப்பு | வரிக்குட்பட்ட விலை மதிப்பு | தொகை | | எண் | தேதி | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| | | | | | | | | | | | |

**அறிக்கை–3[விதி 89(2) (ஆ) மற்றும் 89(2) (இ)– ஐ பார்க்க]**

திருப்புத்தொகை வகை :வரி செலுத்தப்படாத ஏற்றுமதி(சேர்க்கப்பட்ட உவவ (ITC)

(தொகை ரூபாயில்)

| வ எண் | விலைப்பட்டியல் விவரங்கள் | | | சரக்குகள் /சேவைகள் (G/S) | கப்பல் பட்டியல் /ஏற்றுமதிக்கான பட்டியல் | | | EGM விவரங்கள் | | BRC/ FIRC | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | தேதி | விலை மதிப்பு | | துறை குறி டு | எண் | தேதி | குறிப்பு எண. | தேதி | எண் | தேதி |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| | | | | | | | | | | | |

ஆ) அறிக்கை 3அ–க்குப் பிறகு, பின்தொடரும் அறிக்கை இடை சேர்க்கப்பட வேண்டும். அதாவது: –

**“அறிக்கை–4[விதி 89(2) (ஈ) மற்றும் 89(2) (உ)–ஐ பார்க்க]**

திருப்புத் தொகை வகை: சிபொம(SEZ) அலகு அல்லது சிபொம(SEZ) மேம்பாட்டாளருக்கு வழங்கல் காரணமாக (வரி செலுத்தப்பட்டது)

(தொகை ரூபாயில்)

| பெறுபவரின் GSTIN | விலைப்பட்டியல் விவரங்கள் | | | கப்பல்பட்டியல் ஏற்றுமதிக்கான பட்டியல் /சிபொமா–வால் மேற்குறிப்பு எழுதப்பட்ட விலைப்பட்டியல் | | ஒருங்கிணைந்த வரி | | மேல் வரி | ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல்வரி பற்றுச் சீட்டில் உள்ளடக்கப்பட்டது ஏதேனும் இருப்பின் | ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல் வரி வரவுச் சீட்டில் உள்ளடக்கப்பட்டது ஏதேனும் இருப்பின் | நிகர ஒருங்கிணைந்த வரி மற்றும் மேல்வரி(8+9 +10–11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | தேதி | ஜீல மதிப்பு | எண் | நாள் | வரிக்குட்பட்ட மதிப்பு | தொகை | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| | | | | | | | | | | | |

xiv) 2018 பிப்ரவரி 1 முதல் படிவம் சமசேவEWB–01 மற்றும் சமசேவEWB–02–க்காக,பின் தொடரும் படிவங்கள் மாற்றீடு செய்யப்பட வேண்டும். அதாவது:-

**படிவம் சமசேவ EWB –01**

(விதி 138பார்க்க)
மின்னனு வழிப் பட்டியல்

மின்னனு வழிப்பட்டியல்எண் :

மின்னனு வழிப்பட்டியல்தேதி :

உருவாக்குபவர் :

செல்லுபடியாகும் ஆரம்பத்தேதி :

செல்லுபடியாகும்முடிவு தேதி:

| **பகுதி-அ** | | |
|---|---|---|
| A.1 | வழங்குபவரின் சமசேவ | |
| A.2 | பெறுபவரின் சமசேவ | |
| A.3 | ஓப்படைப்பின் இடம் | |
| A.4 | ஆவண எண் | |
| A.5 | ஆவண தேதி | |

| | | |
|---|---|---|
| A.6 | சரக்குகளின் விலைமதிப்பு | |
| A.7 | எச்எஸ்எண்(HSN)குறியீடு | |
| A.8 | கொண்டு செல்வதற்கான காரணம் | |
| **பகுதி–ஆ** | | |
| B1 | சாலைக்கான வாகன எண் | |
| B2 | போக்குவரத்து ஆவண எண் | |

**குறிப்புகள்:**

1. நிரல்A.7–ல் முந்தைய நிதியாண்டில் ஐந்து கோடி வரை ஆண்டு மொத்தத்தொகை உள்ள வரி செலுத்துபவர் குறைந்தபட்சம் இரண்டு இலக்க HSN குறியீட்டையும் மற்றும் முந்தைய நிதியாண்டில் ஐந்து கோடிக்கு மேல் ஆண்டு மொத்தத்தொகைஉள்ள வரி செலுத்துபவர் நான்கு இலக்க HSN குறியீட்டையும் குறிப்பிட வேண்டும்.

2. நுழைவு பட்டியல் அல்லது ஒப்படைப்பு சீட்டு, வழங்கல் பட்டியல், வரி விலைப்பட்டியல், ஆவண எண்ணாக இருக்கலாம்.

3. போக்குவரத்து ஆவண எண்ணானது சரக்குகள் பெறுகை எண் அல்லது இருப்பூர்தி பெறுகைஎண் அல்லது விமானவழி எண் அல்லது கப்பல் சரகேற்ற பட்டியல் எண்ணைக் குறிக்கிறது.

4. ஒப்படைப்பு இடத்தின் அ.கு.எ(PIN)குறியீட்டை ஒப்படைப்பின் இடம் குறிப்பிடும்.

5. கொண்டு செல்வதற்க்கான காரணம் பின் தொடரும் ஒன்றிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும்.

| குறியீடு | விவரிப்பு |
|---|---|
| 1. | வழங்கல் |
| 2. | ஏற்றுமதி அல்லது இறக்குமதி |
| 3. | சில்லறை வேலை (Job Work) |
| 4. | எஸ்கேடி(SKD)அல்லது சிகேடி( CKD) |
| 5. | பெறுபவர் தெரியவில்லை |
| 6. | வரிசை விற்பனை |
| 7. | விற்பனை திருப்பம் |
| 8. | பொருட்காட்சி அல்லது கண்காட்சி |
| 9. | சொந்த உபயோகத்திற்காக |
| 10. | மற்றவை |

**படிவம் சமசேவ EWB–02**

(பார்க்க விதி 138)

(ஒன்றிணைக்கப்பட்டமின்னனு வழிப்பட்டியல்)

ஒன்றிணைக்கப்பட்டமின்னனு வழிப்பட்டியல்எண்:

ஒன்றிணைக்கப்பட்டமின்னனு வழிப்பட்டியல்தேதி:

உருவாக்குபவர் :

வாகன எண் :

| | |
|---|---|
| மின்னனு வழிப்பட்டியல்களின்எண்ணிக்கை | |
| மின்னனுவழிப்பட்டியல்எண். | |
| | |
| | |
| | |
| | |

xv) **2018**, பிப்ரவரி **1** முதல்,**படிவம் சமசேவEWB–03 –இல்**“யூடி” (UT)என்ற எழுத்துக்கள் நிகழும் அந்த இரண்டு இடங்களில்“ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி“என்ற வார்த்தைகள்மாற்றீடு செய்யப்பட வேண்டும்;

xvi) **2018**, பிப்ரவரி **1** முதல்,**படிவம் சமசேவ INV–01–இல்**“யூடி” (UT)என்ற எழுத்துகளுக்காக“ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதி “என்ற வார்த்தைகள்மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

முனைவர்.சி.சந்திரமௌலி
கூடுதல் அரசு தலைமை செயலாளர் (மு.கூ.பொ.)